ஸ்ரீ [illegible] பேரில்

[illegible] சிந்து

Q6: 417
N14
186179

162

✝

ஜெகதீசன் துணை.

---

# இயேசு பகவான்பேரில் இன்பரசக் கீர்த்தனை.

இந்திரசபா, இந்துஸ்தான், பார்ஸி முதலிய வர்ணமெட்டுக் கொண்டது.

---

இஃது

தூத்துக்குடி,
ஜா. சிகாமணி என்பவரால்
இயற்றி,

ஷையூர், தமிழ்ப் பண்டிதர்,
மகா-ள-ள-ஸ்ரீ M. P. மஸ்கரீஞாஸ் அவர்களால்
பார்வையிடப்பெற்றது.

---

...NTED AT THE S. P. PRESS,
TUTICORIN

1914

OFFICE OF THE REGISTRAR
9 - JAN 1915
MADRAS

Q6:417
M14
186179

OFFICE OF THE REGIST
9 - JAN

✝

திரியேகநம:

# இயேசு பகவான் பேரில்
## இன்பரசக்கீர்த்தனை.

### விருத்தம்.

விண்ணுலகோர்போற்றும்வேதாகமப்பொருளே
கண்ணுலவும்கருமணியேசுற்கண்டேசாக்கண்ணியே
மண்ணுலகிலெலம்பவத்தைமாற்றவந்தமாமருந்தே
எண்ணிவந்தபாலனின திருங்கழலைப்போற்றிசெய்தேன்

### வெண்பா.

ஆண்டாண்டாயெம்மைஅரவணைக்குக்காத்துவரும்
தூண்டாமணிவிளக்கேதூய்சுடரே—வேண்டுவரம்
நன்றுபுரிந்தன்றன்றுநன்னயமாயான்துதித்தே
என்றுமுனைப்பாடவருள்—ஈ.

### விருத்தம்.

மருவுலவும்மலர்நிறையும்சோலைசூழ்ந்த
வளமிகுந்தபெத்லேநகர்வந்துதித்து
அருளுலவும்அற்புதமநேகஞ்செய்தாய்
அண்டிவந்துனடிகாண்போர்க்கருளேதந்தாய்
திருவுலவும்தேவசிசுயேசுவேயுன்
ஜெனனகவிசெப்பவந்தசிறியேனுக்கு
இருளுலவும்இடராணுகாநின்கண்ணோக்கி
எந்நாளுந்துணைதருகஇறைஞ்சினேனே.

## தேவதுதி.

இராகம்-கல்யாணி] கீர்த்தனம் I. [தாளம்-ரூபகம்

(சீரார் சபையில்வாழும், என்ற மெட்டு.)

பல்லவி.

பரமபதியில்வாழும் படைத்தவனே சரணம்

அனுபல்லவி

நரரூப மெடுத்தோனே நாயகனே சரணம்.

சரணங்கள்.

(1) மங்கை மரிவயிற்றில் மனுவானோனே சரணம்
சங்கை நிறைபரனே சாயுஜ்யனே சரணம்

(2) மூவா முதல்வனான முந்தைபனே சரணம்
ஜீவா பராபரம திரியேகனே சரணம்

(3) வேதமறைகள் போற்றும் வேதாந்தனே சரணம்
பூதலமீ தெழுந்த புண்ணியனே சரணம்

(4) அந்தகன்குறை தீர்த்த அற்புதனே சரணம்
சிந்தை துயராறுக்கும் ஜெயசீலனே சரணம்

(5) நாவில் வரந்தருவாய் நன்னயனே சரணம்
பாவில் குறைதவிர்ப்பாய் பாலகனே சரணம்

(6) மிடியேன் பவமொழித்து மீட்பவனே சரணம்
அடியேன் சிகாமணியை ஆள்பவனே சரணம்

---

## சபை வணக்கம்.

இராகம்—சுருட்டி] கீர்த்தனம் II. [பார்சிமெட்டு—அடதாளம்

(வனத்திசை நோக்கிடுங் கண்களோ, என்ற மெட்டு)

பல்லவி.

(1) சரணம் சரணம் சபையோரே
தந்தேன் தந்தேன் தாளிணைக்கே

(2) கல்விக் கடலைக் கடந்தோர்க்கும்
கனதன வான்களே பெரியோர்க்கும் (சர)

(3) மூத்தமி ழாய்ந்த வித்வர்க்கும்
பக்தியிற் சிறந்த முத்தர்க்கும் (சர)

(4) சாரந்தை கின்னரி தம்பூரு
ஜாலர்வீணை மிருதங் கத்துக்கும் (சர)

தமிழ்நாடு ஆவணக் காப்பக ... 600 003
18/179

(5) சீர்நிறை யிந்தச் சபைதனிலே
சேயன் பணிவொடு பதம்பாட (சர)

(6) மதலை மொழியென மகிழ்வீரே
வாழும் மணிகவி புகழ்வீரே (சர)

(7) பாவல ரருமை நாவலரறிவீர்
பாலன் சிகாமணிக் காசீர் புரிவீர் (சர)

---

இராகம்—லாவணி] கீர்த்தனம் III. [தாளம்—ஆதி

(1) பெத்தலேம் பதியிலீசன் சத்திரத்தில் சிற்றுருவாய்
பிள்ளைவடிவமாகி—அவர்
பிறந்து தமது சொந்த ஜனங்கள் பவங்கள் போக்க
பேருலகதைப் போக்கி, மேன்மையை நீக்கி,
புவியைநோக்கி, குடிலை ஆக்கி (ஆகா-பெ)

(2) பிள்ளையாயுரு வெடுத்துப் புல்லணையிலே படுத்துப்
பிறந்தார் நமக்காயின்று—அவரைப்
போற்றித்தினந் துதிக்கப்பிதாவினுத்தரவென்று
பேணியறிந்தோமுன்பு, பாலனை நம்பு, நம்பினபின்பு,
தருவார் அன்பு (ஆகா-பெ)

(3) அந்தரத்தோர் மகிழ்ந்து விந்தையாகவே வந்து
அண்ணலென்றடி பணிந்து—வெகு
ஆர்ப்பரியத்துடனே அனந்த ஞானிகள் கூடி
ஆயர்குடிகளைத்தேட, சுதனைநாட, கந்தையால்மூட,
மங்களம்பாட (ஆகா-பெ)

(4) மந்திரமாநகர் ஷண்முகபுரந்தனில் வாழ்
மாமிசின் சபைகூடி—இன்று
மந்தையிலெமக்காய் கந்தையணிந்து வந்த
மனுவேலன் பாதந்தேடி, மணிபதம்பாடி ஒன்றுகூடி,
துதிப்போம் நாடி (ஆகா-பெ)

---

இராகம்—காப்பி] கீர்த்தனம் IV. [தாளம்-ரூபகம்

பல்லவி.

நாளே நல்லநாள் பாலன் பிறந்த (நாளே)

அனுபல்லவி.

ஆளும் யேசுநாயகன் பூவில் வந்துதித்த (நாளே)

சரணங்கள்.

(1) ஆதனேவை புரிந்த தீதை யொழிக்க முந்த
அன்னைமரியா மிந்த கன்னிவயிற்றில் வந்த (நாளே)

(2) சோதி வடிவாய் வந்த தூயமறையைத்தந்த
நீதி லெமைப் புரந்த தேவசுதன் பிறந்த (நாளே)

(3) தூயவானோர் மிகத் தொழுது மன்றுட
ஆயர்பால் தயிர்கொடு அடி பணிந்திட்ட (நாளே)

(4) பாவலர்கள் கூடி பண்பின் இசைபாடவும்
பாரனைத்துமே பானைக்கொண்டாடவும் (நாளே)

(5) தாசன் சிகாமணியும் தமியோருங்கூடி
நேசமாய்ப் பரன்தனை நினைந்து பண்பாடும் (நாளே)

---

இராகம்-தேசிகதோடி] கீர்த்தனம் V. [தாளம்-ரூபகம்

(அன்னமே யுனையன்றியோர் துணை என்ற மெட்டு.).

பல்லவி.

ஐயனே யுனையன்றி யோர்துணை
ஆரையா யெனைப் பாரையா (ஐய)

அனுபல்லவி.

ஆரையா பதில் கூரையா யெனை
யோரையா பவந் தீரையா (ஐய)

(1) பாருமென்ற கன்னி யவள்தனைக்
பார்த்து ரட்சித்த தில்லையா
அருமில்லாத பாவி யெனை நீர்
ஆதரிப்பது தொல்லையா (ஐய)

(2) இன்னிலுன்னரு ளோங்கவே இக
பாலர்கள் மன மோங்கவே
கன்னிபாலாநின் கீதங்கள் யான்
கருத்தா யிவர்களுக் கோதவே (ஐய)

(3) தோடிராகம் நான் பாடியேயுனைத்
தோத்தரித்தேன் தேடியே
நாடிவந்த வென் பாவிலே வரம்
நல்குவாயிப் பூவிலே (ஐய)

(4) தாசன் சிகாமணி பாடவே யிந்த
தாணியோருனைத் தேடவே
பாச பந்தங்க ளோடவே யிப்
பாரினுன் புகழ் நீடவே (ஐய)

இராகம்-செஞ்சுருட்டி] கீர்த்தனம் VI. [தாளம்-ரூபகம்

(இன்னமுங் காணேனே. என்ற மெட்டு.)

பல்லவி.

வந்து வரந்தாரும் தாசனின்
பந்தவினை தீரும் சாமியே (வந்)

சரணங்கள்.

(1) எந்தமக் காகவே மந்தையிலே வந்த
சுந்தரனே வேலா மரிபாலா
ஜெயசீலா இது வேளை (வந்)

(2) தஞ்சமென்றவர்க்கு அஞ்சலென்றே வரும்
கஞ்சமலர் வாசா அருள் நாசா
ஜெக தீசா இது தகு (வந்)

(3) கண்டபடி யெல்லாம் வண்டருடன் கூடி
கொண்டேன் சதகோடி வினைநாடி
பிழை தேடித் திரிந்தனன் (வந்)

(4) பஞ்சமா பாதக வஞ்சக நானெனக்
கொஞ்ச முந்தள்ளாமல் வீண் போகாமல்
போதேகாமல் இரங்கியே (வந்)

(5) மஞ்சை சிகாமணி கெஞ்சு மன்றாட்டையுன்
நெஞ்ச மதிலேற்று முகம் பார்த்துப்
பாதுகாத்துப் புவிமீது (வந்)

---

இராகம்-இந்துஸ்தானி] கீர்த்தனம் VII. [தாளம்-ஆதி

(தில்பாஹோ தில்பைசா, என்ற மெட்டு)

கண்ணிகள்.

(1) ஆவிடை மீதெழுந்த அற்புதனே பாலகனே
தாவில் புரைதவிர்க்குந் தருமகுணானந்தனே (ஆ)

(2) காவிலதா மேவைசெய்த கனிவினையை நீக்கவந்த
ஆதிபரன் தன்சுதனே அடியேனெனைக்காத்தருள் வாய் (ஆ)

(3) முத்திக் கதிபதியே சித்திதரு மாநிதியே
நித்திய முமுன்நன்பாதம் நத்தித்தொழவேயருள்வாய் (ஆ)

(4) தஞ்சமெனக் கெஞ்சினேனுன் கஞ்சமலர்த் தாளிணையே
சஞ்சலந் தவிர்த்தாளவே வஞ்சமேனோ புகல்வாய் (ஆ)

(5) எத்திசையும் புகழும் சத்யமறைப் போதகனே
பத்தன் சிகாமணியின் பாவிற்கருளே புரிவாய் (ஆ)

இராகம்-தேசிகதோடி] கீர்த்தனம் VIII. [தாளம்-ஆதி

(கண்ணே புன்னை யான் தேடி, என்றமெட்டு)

பல்லவி.

பரனே பாதம்யான் காண பாரில் நாளும்
பாடியுனைத் தேடியே
நாடிமனம் வாடினேன் (பர)

சரணங்கள்.

(1) நானுப் வந்த பெருமானே
நடுத்தீர்ப்பினுபர் சீமானே
வார்சுரர் பணியுங் கோமானே நீர்
வாரும், வாரும் பூமானே (பர)

(2) பார்த்தாலல்லோ ஆனந்தம் உனைப்
பாராதிருக்கும் பரியந்தம்
எர்க்கும் ஆசை நிர்ப்பந்தம் நான்
எதுசெய்வேன் தாபந்தம் (பர)

(3) உந்தன் பாதங் கண்டோர்கள் நல்
லுபர்ப்பதிகை கொண்டார்கள்
சிந்தனை செய்து விண்டோர்கள் பூவில்
சீறும் பாவம் ஆண்டார்கள் (பர)

(4) புவனரட்சக பரிபாலா ஏழைப்
புல்லன்மணி பணிபுங்காலா
தவத்தோர் போற்றுஞ் செங்கோலா நின்
தாசர்க் கிரங்குங் குணசீலா (பர)

---

பார்வி நோட்] கீர்த்தனம் IX. [தாளம்-சாப்பு

(1) ஸ்திரீவித்தில் வந்தவனே திரிலோக சுந்தரனே
சிறியனெனையேகண் பார், பார், பார் (ஸ்தி)

(2) ஆரணு பரி பூரணு
ஆலோலிதமுகனே அமலானந்த சுகனே
அடியேன் மிடியறவே பார், பார், பார், (ஸ்தி)

(3) தேவனே ஜெக நாதனே
வாதுசெய்தல் முறையா வாழ்நாள் வளர்பிறையா
வந்தென் துயரொழிய பார், பார், பார், (ஸ்தி)

(4) தேடினேன் கவி பாடினேன்
தாய்மரியாள் புத்திரனே தாசர்கள் மித்திரனே
தாழ்பணிந்தே னெனைப் பார், பார், பார், (ஸ்தி)

(5) சாற்றினேன் பாதம் போற்றினேன்
சாஸ்திர நேத்திரனே ஸ்தோத்திரப் பாத்திரனே
தாசன் மணிகவியை பார், பார், பார், (ஸ்தி)

---

இராகம்-குல்ரோஜ்] கீர்த்தனம் X. [தாளம்-ரூபகம்

(சோலை யெங்கே மேடை யெங்கே, என்ற மெட்டு)

(1) ஏழையென்னை யாளவேணும்
யேசுநாயகா, ஆ, ஆ, என்றன்
இடரனைத்துந் தீர்க்கவேணும்
இறையே தாயகா (ஏழை)

(2) தாளைவேண்டி தஞ்சம் வந்தேன்
தூக்காத் தாளய்யா ஆ, ஆ, இந்த
தருணமென்னைக் காவாவிடிலோ
தயங்குவேனய்யா (ஏழை)

(3) தொந்தமான பந்தபாவம்
தொடர்ந்து சூழுதே ஆ, ஆ, இதயம்
துன்பக் கடலினுட் புகுந்து
துக்கத் தாழுதே (ஏழை)

(4) மண்ணுடம்பு மாளுமுன்னே
மாசு தீரய்யா ஆ, ஆ, இந்த
மாபாவி மணி மனுக்கிரங்கி
மறுமை சேரய்யா (ஏழை)

(5) சிந்தை தெளிய எந்தவகையோ
சிறியனறியேனே ஆ, ஆ, தாசன்
சிகாமணிக்குன் அருள்தராவிடில்
தியங்கி வாடுவேன் (ஏழை)

---

(கானகத்தில் யானலைந்து என்ற மெட்டு)

இராகம்-தேசிகமுகாரி] கீர்த்தனம் XI. [தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

(1) மாதவமே யானுமிங்கு மாபாவியாவது தகுமோ
பாதகனை மீண்டருள்செய் பரபிரமமே வர்மமோ (மா)

(2) ஆதிசுதனாக யிந்த அவனியோர்க்காய் வந்தபாலா
கோதிலாத குணக்கடலே குஷ்டன் குறைதீர்த்த சீலா (மா)

(3) தெரிவையர்களாசையின்றி தியக்கமிகக்கொண்டேன் தேவா
அறிவில்லாத சிறியனென்னை ஆதரித்தாள்வாயே மூவா (மா)

(4) மண்ணுலகின் மாய்கையினால் மட்குடம்போலானேன் நாதா
கன்மமென்ன செய்தேனோ நான் கருத்தறியேன் கருணை நீதா

(2) ஒருமையுடனினது தாளை ஓதவருள் தாரும் போதா
சிறுவன் சிகாமணி புகலும் சொல்முறை கேட்டாளும் வேதா

---

## கீர்த்தனம் XII.

(சார்ந்த சற்குண நவநீதா, என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

பாவிபணிந்தே னிருதாளை யென்றன்
பாவமகற்று மிது வேளை (பாவி)

சரணங்கள்.

(1) காவிலதாம் வினையை நீக்க வந்த
கர்த்தாவே யென்றன் முகம் நோக்கு
கூவியழைத்தேன் பெரும்பாவி யென்றன்
குற்றம் பொறுத்தாளுவாய் மேவி (பாவி)

(2) அண்டர் பணியும் சருவாதி யென்னை
ஆதரிப்பதுவுன்றன் நீதி
பண்ணால் பாடினேனுன்னை நாடி பாவப்
பாரமகற்று மனங்கூடி (பாவி)

(3) உன்னையல்லா லெனக்கு வேறு வெகு
உற்றதுணை யிங்கு வேறாரு
சொன்னேனென் குறைகளிப்போது நற்
சுகங்கொடுத்தாள் புவிமீது (பாவி)

(4) பாசபந்தங்களகன்றோடும் உன்றன்
பாதம் பணிந்து பதம்பாடும்
தாசன் சிகாமணியை யாளும் பாவத்
தாவிடாணுகாமல் நாளும் (பாவி)

---

இராகம்-இந்துஸ்தான்தேசிகம்] கீர்த்தனம் XIII [தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

(1) நெஞ்சமே யிந்த மானிடவாழ்வு நிச்சயமா
நிலமிசை நீர்க்குமிழியென நிலையாதுயிர் கனவேமட (நெ)

(2) கெஞ்சிடுவோர் மனச் சஞ்சலந் தீர்த்திடும்
கிருபாகரனருள் சாகரனிருதாளிணை நினையாப்பேதை (நெ)

(3) ஆதயனாகவிப் பூதலத்தின்மீது
அன்னைமாமரி மகனாவன் ஜெயநாயகன் பதமே பணி (நெ)

(4) குஷ்டன் முறையிடக் கொடுந்துயர் தீர்த்த
குணபாத்திரரருள் நேத்திரரெனைக் காத்தவர் சரணீ நினை (நெ)

(5) மாயப்பிரபந்த பாசமதைப் போக்கி
மறைமானிடர் புரையோடமூள் முடிசூடினனடியே பணி (நெ)

(6) மாநிலத்தோர் புகழ் மந்த்ர நகரில்வாழ்
மைந்தன் சிகாமணி பாடிய மனுவேலனினடியைத்துதி (நெ)

---

கீர்த்தனம் XIV.

(ராஜாகுமை சவ்மசா, என்ற இந்துஸ்தான் மெட்டு)

பல்லவி.

(1) வந்தாளுன்றன் மைந்தனெனை
வாது செய்யாதே நான்
வஞ்சகனாயினுங் கொஞ்சமேனும்
வந்தாட் கொள்வாயே (வந்)

(2) பந்தபவம் சூழ்ந்து வந்தென்றனைப்
பல்துயர் செய்யுதே இன்னும்
பாராமுகமாய் வாராவிடில் யான்
படுவேன் மிகுதுயரே (வந்)

(3) பஞ்சம் படைநோய் மிஞ்சுங்கலியால்
பஞ்சையனானே உன்றன்
தஞ்சமடியேன் கெஞ்சுந்தமியேன்
றனைக்காத்தாள்வாயே (வந்)

(4) கடலும் புயலும் அடங்கிநிற்கக்
கட்டளை யிட்டாயே இங்கு
அடரும் பஞ்சம் படைநோ யொழித்து
ஆள்வாய் மணியெனையே (வந்)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 186179 சென்னை 600 008

## கீர்த்தனம் XV.

(மங்களந் தருமதுரை, என்றமெட்டு)

பல்லவி.

(1) ஆதரவில்லாப்பாவி யென்றனே
ஆண்டுரட்சியுமையனே
பாதகன் வினைதீர்க்கவே வந்த
பாலனே மனுவேலனே (ஆத)

(2) குற்றங்கள் கோடி செய்தேனுயினும்
குழந்தை யானுனக் கல்லவா
சொற்பழுதில்லா நின் சமுகத்தில்
சிறியனென்குறை சொல்லவா (ஆத)

(3) அன்னைதந்தை தமர்தாரம் சோதரர்
அனைவருந்துணை யாவரோ
என்னுயிர்விட்டுப் போமெனப் போற்றி
ஏற்றினும் நமன் போவரோ (ஆத)

(4) பண்டு வினையைத்தீர்க்கவே சிறு
பாலனுனீர்க்காலமே
தொண்டன் கிராமணியின் றுயரைத்
தீர்த்தா னனுகூலமே (ஆத)

---

இராகம்-பியாக்] **கீர்த்தனம் XVI.** [தாளம்-ரூபகம்

(வாரும் யென்கண்மணி என்ற மெட்டு)

பல்லவி.

பாதமெரிசனந்தாரும் என்றன்
பாவவினையாவுந் தீரும் (பா)

அனுபல்லவி.

பூதலமேவிய பாதகர்க்கெட்டாத
பொன்னுலகுக் கதிபதியே
பூரணனே காரணனே
ஆரணமய மானவனே (பா)

சரணங்கள்.

(1) மூவுலகும் படைத்தோனே பர
முத்திதரும் பகவானே
மேவுமுமது தாளிணை யன்றியிம்
மேதினியிற்றுணையில்லையே

மாவுலகில் நாவலரும்
பாவலரும் ஆவலுறும் (பா)

2) கன்னியின் முன்றுயர் விடுத்தீர் கானூன்
கலியாணத்தில் ரசமழைத்தீர்
அன்னிதமாய் பணிஇந்நிலமீதில்
அலகைக் கடுமையாகாமல்
அற்புதனை தற்பரனே
அற்பனெனக் காதர்வாய் (பா)

---

இராகம்-செஞ்சுருட்டி] கீர்த்தனை XVII. [தாளம்-ரூபகம்
(சிந்து.—தூறுதாம் மாறிமாறி, என்ற மெட்டு)

கண்ணிகள்.

(1) ஆவிடையிற் பள்ளிகொண்ட ஆதிசுதனானவனே
ஆதரையோர்க்காகவந்த ஐயனே யென்னை
ஆளவுந்தகாதோ சொல்லும் மெய்யனே

(2) தாவினிலுந்தன்புகழை நாவினாலுரை செய்திட
தாசனொரு நாவதுவும் போதுமோ ஏசு
ராஜனே யெவக்குமொளி தாருமோ

(3) உத்தம குணத்தனேயுன் சித்தமகிழ்ந்தே யென்றனை
நித்தமும் வந்தாண்டுகொள்ள வாருமே ஈசா
எத்தேசவேளையுங் கண்ணாரப் பாருமே

(4) அற்புதமீன் வேட்டையிலே அன்று சிமோன் தோழரோடு
சற்குருவாய் நின்றபரி பூரண யென்றன்
சஞ்சலந் தீர்த்தாளுமா று காரண

5) துங்கவனொளிக்கு நிகர் தூயனேவுன்றன் புகழை
தொண்டன்மணி சாற்றினேன் சிந்தாகவே யெந்தன்
தொல்லைநீக்கி யாள்வாய் யிந்தநேரமே

---

கீர்த்தனம் XVIII.
(திருப்புகழ்.—கருவினுருவாகி, என்ற சந்தம்)

பரமபதமே செறிந்து பாவிகளேயே நினைந்து
பட்சமிகவே நிறைந்த மனதோடு
தாணிதனிலே மரியாள் மகவுஎன வேபிறந்து
தகமையுடனே வளர்ந்து அருளோங்கி

அற்புதமோ டாகமங்க ளதிகமறை யோதுமூன்றன்
அடிகள்தனை யேநினைந்து துதியாமல்
அம்புவிமூ வாசைகொண்டு அதன்கவலை யாயுழன்று
அலையுமடி யேனையுன்ற னடிசேராய்
பந்தபவத் தாலுழலு மிந்தரையோர்க் காயுகந்து
பசுவிடையின் மீதமர்ந்த பாலோகா
உந்தனுப தேசமொன்று மெந்தனித யங்கனிந்து
ஓதவறி யாமல்நின்ற மதியீனன்
சுந்தரம டந்தையர்தம் சந்திர முக மேவியந்து
சிந்தைதடு மாடிநொந்த சிறியேனின்
வந்ததுயரின்றொழிய உந்தன் மனமேயுவந்து
வாமருள நீயெழுந்து வருவாயே

---

## கீர்த்தனம் XIX.

## மங்களம்.

மங்களம் நித்தியசுப மங்களம் நித்தியசுப
மங்களமே ஜெய மங்களமே

(1) துங்கவனொளி போல்வந்து
எங்களைக்காப்ப யேசையா
சங்கையுமது பாதம் சரணமையா (மங்)

(2) வானவர்க்குந் தானவர்க்கும்
வந்தடி பணிந்தவர்க்கும்
ஞானபரனையீன்ற மாமரிக்கும் (மங்)

(3) சத்திய வேதத்திற்கும்
தகமைசேர் பிஷோப்புக்கும்
உத்தமகுருமாருப தேசிகட்கும் (மங்)

(4) ஓதிய வென்குருவுக்கும்
உற்ற பெரியோருக்கும்
நீதியாயரசாளும் நீதிமன்னர்க்கும் (மங்)

(5) நாவலர்க்கும் பாவலர்க்கும்
நாடிய சபையோர்கட்கும்
தாசன் சிகாமணி தமிழ்கவிக்கும் (மங்)

(முற்றிற்று)

---

# முடிவுரை.

ஆழிசூழுலகின்கண் வசிக்கும் அன்புள்ள
கிறிஸ்த்வ நண்பர்காள்!

இந்நூல் அச்சிற் பதிப்பிக்கப் பணவுதவிபுரிந்த கனவான்களில் பெரும்பாலார் சிவ சமையத்தார்களென்பது யான் சொல்லாமலே விளங்கும்; "முத்திபெற அன்பே முதல்" என்றும் "தெய்வமிகழேல்" என்றும் இருக்கும் முதியோர் வாக்கியங்களை நன்குணர்ந்த பெருமக்கள் எனது நன்னோக்கத்தை முடிவுபெறச் செய்தனர். எம்பெருமான் இவர்களின் வாழ்நாளில் இகபரத்துக்குரிய நல்வழிப்பேற்றையளித்து சுகஜீவிகளாயும், செல்வர்களாயும், கல்வியிற் சிறந்தவர்களாயும், பேரன்புள்ள இவர்களின் சிநேகம் நம்மனைவருடன் நிலைத்திருக்கவும் கிருபை புரியும்படி ஒன்றுகூடி சங்கீர்த்தனத்தோடும் இதற்குத் துணையாகிய வாத்திய நல்லொலியோடும் பகவானை பஜனைசெய்து பணிபுரிவோமாக.

இங்ஙனம்
தூத்துக்குடியிலிருந்து கண்டிநகர் வந்திருக்கும்
ஜா. சிகாமணி.

இலங்காபுரியின் இரத்தினமெனப் பெயர்வழங்கிய கண்டிமாநகரின்கண் வசிக்கும், இதனடியிற்கண்ட நாமதேயமுள்ளவர்களின் பொருளுதவியால் இப்புத்தகம் அச்சிடப்பெற்றது.

## நாம தேயங்கள்.

| | | | ரூ | சதம் |
|---|---|---|---|---|
| கனம். | நேற்றிவ் டாக்ற்றர் சு. இருளசாமி அவர்கள் | | 2 | 0 |
| ,, | மு. முத்தையா பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | மு. வெள்ளைச்சாமி பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | ஆ. கதிர்வேல்பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | மு. சண்முகசுந்தரம் பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | கு. புதியவன் பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | ச பிச்சையா பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | பொ. சங்கரலிங்கம் பண்டிதர் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | M. K. டேவிட் அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | V. M. மருதமுத்து அவர்கள் | ... | 1 | 0 |
| ,, | மு. சுப்பிரமணியன் பண்டிதர் அவர்கள் | ... | 0 | 50 |
| ,, | ரா. சாமிபண்டிதர் அவர்கள் | ... | 0 | 50 |
| ,, | A. செல்லையா அவர்கள் | ... | 0 | 50 |
| ,, | S. அந்தோணி அவர்கள் | ... | 0 | 50 |
| ,, | பெ. சின்னையா அவர்கள் | ... | 0 | 50 |
| ,, | வே. கருப்பன் அவர்கள் | ... | 0 | 50 |
| ,, | உ. சீனிவாசகம் பண்டிதர் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | பொ. சுப்பையா பண்டிதர் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | சொ. பலவேசம் பண்டிதர் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | கு. பலவேசம் பண்டிதர் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | பொ. ஆறுமுகம் பண்டிதர் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | M. சமாதானம் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | S. தங்கையா அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | மு. கி. அ. அப்துல்காதர் சாய்பு அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | க. பெரியநாயகம் அவர்கள் | ... | 0 | 25 |
| ,, | ஜா. சிகாமணி, அன் பிரதர்ஸ் | ... | 5 | 50 |

கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையாக யான் கருதிய காரியத்தை முடிவுபெறச்செய்த, இவ்வனைவருக்கும் யான் நன்றியறிதலான வந்தனம் செய்கின்றேன்.

186179
சென்னை-600 003

இப்படிக்கு
ஜா. சிகாமணி,
நேஷனல் பேங்க், கண்டி.

1A
1-115